# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

## மானியக் கோரிக்கை எண். 23

## கொள்கை விளக்கக் குறிப்பு 2012 – 2013

**I. முன்னுரை**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது, தக்க சமயத்தில் ஆபத்துகளின் போது உதவும் மீட்பாளராக செயல்படுவதால், அனைவருக்கும் உற்ற நண்பனாக விளங்குகிறது. தீ விபத்து ஏற்படும் நேரங்களில், நகர்பகுதி அல்லது ஊரகப் பகுதி, செல்வந்தர் அல்லது வறியவர் என்ற பாகுபாடின்றி அனைத்து மக்களும் துயர் துடைப்புக்காக இத்துறையை எதிர்நோக்குகின்றனர். விபத்து நேரும் இடத்திற்கு தாமதமின்றி விரைந்து சென்று தீயை அணைப்பதிலும், மக்களை காப்பாற்றுவதிலும், உடைமைகளை இழப்புகளிலிருந்து மீட்பதிலும், வெளிப்படுத்தும் தனித்திறமையால் இத்துறையினர் மக்களின் மதிப்பினையும், பாராட்டுதலையும் பெறுகின்றனர். இந்த கடினமான பணியை எவ்வித குறைபாடுகளுமின்றி செயல்படுத்துவதற்கு நவீனமயமாக்கப்பட்ட உபகரணங்கள் மற்றும் அவற்றைக் கையாள்வதில் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட திறமை வாய்ந்த, ஆர்வமுடன் செயல்படும் தீயணைப்புப் பணியாளர்களும்

மிகவும் அவசியம். நவீனமயமாக்கல் மற்றும் ஆயத்த நிலையில் இந்தத் துறையை வைத்திருக்க தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளினால், பேரழிவை ஏற்படுத்தக்கூடிய தீயை எதிர்கொள்ளக் கூடிய தயார் நிலையில் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை உள்ளது.

**II. வரலாறு**

1907–ஆம் ஆண்டு சேப்பாக்கத்திலிருந்த 'வருவாய் வாரிய' அலுவலகத்தில் ஏற்பட்ட பெருந் தீவிபத்திற்கு பிறகு, 'மெட்ராஸ் தீயணைப்புப் படை' (Madras Fire Brigade) என்ற பிரிவு 1908-ஆம் ஆண்டு அரசால் ஏற்படுத்தப்பட்டு, மெட்ராஸ் மாநகர காவல் ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட ஆணையிடப்பட்டது. நகராட்சியின் கீழ் இயங்கிய 8 தீயணைப்பு ஊர்திகளும் மற்றும் சில தனியார் அமைப்புகளிடம் இயங்கிய ஊர்திகளும் இப்பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்டன. 'மெட்ராஸ் நகருக்கான தீயணைப்பு குழுக்களுக்கான அறிவுரைகள்' என்ற கையேடு மெட்ராஸ் மாநகர காவல் ஆணையரால் தயாரிக்கப்பட்டு, பின்னர் இது 8.4.1908 நாளிட்ட அரசாணை எண் 550 மூலம் விதிகளாக பதிவு செய்து ஆணையிடப்பட்டது. இத்துறை படிப்படியாக வளர்ச்சியடைந்து, 1945-ம் ஆண்டில், 55 தீயணைப்பு நிலையங்களுடன் இயங்கியது. மேலும், 1967-ஆம் ஆண்டு

காவல் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு தீயணைப்புத் துறை உருவாக்கப்பட்டு, 2001-ஆம் ஆண்டில், ‘தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை’ என பெயர் மாற்றம் அடைந்து பொலிவு பெற்றது. இத்துறையின் மாநில பயிற்சி பள்ளி 2001-ஆம் ஆண்டு மாநில பயிற்சி மையமாக தரம் உயர்த்தப்பட்டது. தற்சமயம், இத்துறையின் கீழ் 301 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களும், தனியே, 2 மீட்புப் பணி நிலையங்களும், இயங்கி வருகின்றன.

## <u>III. குறிக்கோள்கள்</u>

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது அடிப்படையில் ஒரு சேவையாற்றும் துறையாகும். ‘‘காக்கும் பணி எங்கள் பணி’’ என்பதே இத்துறையின் குறிக்கோளாகும். இந்தியாவில் மிகச் சிறந்த தீயணைப்பு குழுக்களில் ஒன்று என்ற பெருமையை நமது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பெற்றுள்ளது.

பேரழிவை ஏற்படுத்தும் தீ, இயற்கை சீற்றங்கள் மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் பேராபத்துகளினால் பாதிப்படைவோரையும் அவர்களது உடைமைகளையும் மீட்பதே இத்துறையின் முதன்மையான பணியாகும். தேர்தல்கள், கலவரங்கள், கேளிக்கைகள், விழாக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு போன்ற நேரங்களில்

காவல்துறைக்கு இத்துறையினர் உதவுகின்றனர். இத்துறையில் உள்ள நோயாளர் ஊர்திகள் நோயுற்றவர்களையும், காயமுற்றவர்களையும் மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்ல பயன்படுத்தப்படுகின்றன.

விதிமுறைகளை கடைபிடித்து உரிமம் வழங்கக்கூடிய நிகழ்வுகளில், இத்துறை, பலமாடிக் கட்டடங்கள், தொழிற்சாலைகள், பொதுமக்கள் கூடுமிடங்கள் முதலியவற்றை தீ விபத்துகளிலிருந்து பாதுகாக்கும் வழிமுறைகளைப் பின்பற்றி அனுமதி அளிக்கும் துறைக்கு ஆலோசனை வழங்குகிறது. தீ விபத்துகளைத் தவிர்ப்பதற்கு கடைபிடிக்க வேண்டிய சட்ட விதிகளின்படி, தடையில்லா சான்றை இத்துறை வழங்கிய பின்னரே பொருட்காட்சிகளும், விழாக்களும் நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்படுகின்றது.

தீப் பாதுகாப்பு குறித்த பிரச்சாரத்திலும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஈடுபடுகிறது. தீத் தடுப்பிற்கும், தீப் பாதுகாப்பு குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இத்துறை முக்கியத்துவம் அளிக்கிறது. இவ்விழிப்புணர்வு பிரச்சாரங்கள் குறிப்பாக, பள்ளி மாணவர்கள், இல்லத்தரசிகள், கிராமப்புற பெண்கள், குடிசைவாழ் மக்கள், தொழிற்சாலை பணியாளர்கள் மற்றும் வணிக வளாகங்கள், பலமாடிக் கட்டடங்கள் மற்றும்

அலுவலக கட்டடங்கள் முதலியவற்றை பயன்படுத்தும் பொதுமக்களுக்காக நடத்தப்படுகின்றன.

## IV. நிறுவன மற்றும் நிருவாக அமைப்பு

இத்துறையின் நிருவாக அமைப்பை தெரிவிக்கும் விவரங்களை அட்டவணை–I மற்றும் II-ல் காணலாம்.

காவல்துறை தலைமை இயக்குநர் தரத்தில், இந்திய காவல் பணியைச் சேர்ந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் இயக்குநர் தலைமையின் கீழ் இத்துறை செயல்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு துணை இயக்குநர் வீதம் ஐந்து துணை இயக்குநர்கள் இவருக்கு உதவியாக உள்ளனர். இம்மண்டல துணை இயக்குநர்கள் சென்னை, வேலூர், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் உள்ளனர். ஐந்து மண்டலங்களும் 33 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு கோட்டமும் ஒரு கோட்ட அலுவலரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. சிவகங்கையில் ஒரு புதிய கோட்டம் 17.2.2012 அன்று துவக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கோட்டத்திலும் 4 முதல் 16 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் உள்ளன. 301 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களும், இவை தவிர, ஒகேனக்கல் மற்றும் கோத்தகிரியில் இரு மீட்புப் பணி நிலையங்களும் உள்ளன.

ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையமும் ஒரு நிலைய அலுவலரின் கீழ் இயங்குகின்றது. இம்மாநிலத்தில் 13 கோட்டங்களில், தீத்தடுப்பு பிரிவுகள் உள்ளன. இவை கோட்ட அலுவலரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றன. தாம்பரத்தில் ஒரு மாநில பயிற்சி மையம், இணை இயக்குநர் (பயிற்சி மற்றும் மீட்புப் பணிகள்) கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. அவருக்கு உதவியாக ஒரு துணை இயக்குநரும், ஒரு கோட்ட அலுவலரும் உள்ளனர். இடிபாடுகளில் புதையுண்டவர்களை கண்டறிய ஏதுவாக, ஆறு மோப்ப நாய்களை கொண்ட மோப்ப நாய்ப் படை ஒன்று இப்பயிற்சி மைய கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறது. மேலும், இத்துறை வாகனங்களின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக சென்னையில் ஒரு மாநிலப் பட்டறை, இணை இயக்குநர் (பயிற்சி மற்றும் மீட்புப் பணிகள்) அவர்களின் கண்காணிப்பின் கீழ் செயல்பட்டு வருகிறது.

## <u>V. செயல்பாட்டு முறை</u>

இத்துறையின் அடிப்படை அங்கம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ஆகும். ஒவ்வொரு நிலையமும் ஒரு நிலைய அலுவலர் தலைமையின் கீழ் இரண்டு முன்னணி தீயணைப்போர், ஒரு இயந்திர கம்மியர் ஓட்டுநர், இரண்டு தீயணைப்போர் ஓட்டுநர்கள் மற்றும் பதினொன்று

தீயணைப்போர்களுடன் செயல்படுகிறது. தீயணைப்பு உள் கட்டமைப்பானது ரூ.25 லட்சம் மதிப்பு கொண்ட ஒரு தீயணைப்பு ஊர்தியையும் உள்ளடக்கியதாகும். எனவே, ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ஏற்படுத்துவதற்கு சுமார் ரூ.78 லட்சம் செலவு ஏற்படும். மாநிலத்தில் மொத்தம் 301 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் மற்றும் 2 மீட்புப் பணி நிலையங்கள் உள்ளன. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் மாவட்ட வாரியான விவரங்கள் அட்டவணை III-இல் காணலாம். பொதுவாக, ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் துவக்குவதற்கு பின்வரும் அளவுகோல்கள் கடைபிடிக்கப்படுகின்றன:-

i. 25 கி.மீ. சுற்றளவிற்குள் வேறு ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் இருத்தல் கூடாது.
ii. ஒவ்வொரு நிலையமும் குறைந்தது 50,000 மக்கள் தொகைக்கான தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.
iii. தீ விபத்தில் ரூ.50,000/—க்கு குறையாமல் பொருட்சேதம் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் இருத்தல் வேண்டும்.

தீ விபத்து ஏற்படும் நிகழ்வுகளில் பொதுமக்கள் '**101**' என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம். மேலும், ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கும் தனி தொலைபேசி இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. சென்னை நகரம், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் நிகழும் தீ விபத்துகள் பற்றிய தகவல் மாநில தலைமை கட்டுப்பாட்டு அறையிலிருந்து கம்பியில்லா தகவல் தொடர்பு வசதி மூலம் அருகிலுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு உடனடியாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவ இடத்திற்கு தீயணைப்புக் குழு உடனடியாகச் செல்கிறது. தேவைக்கேற்ப அருகிலுள்ள மற்ற நிலையங்களிலிருந்தும் தீயணைப்புக் குழு அவ்விபத்து பகுதிக்கு அனுப்பப்படுகிறது.

புறநகர்களில், தீ விபத்து பற்றிய தகவல் தொலைபேசி மூலம் கிடைத்தவுடன் அத்தகவல் அந்நிலைய பொறுப்பு வகிக்கும் முன்னணி தீயணைப்பு அதிகாரியால் பதிவு செய்யப்பட்டு தீயணைப்புக் குழுவிற்கு தெரிவிக்கப்படுகிறது. தீயணைப்புக் குழு சம்பவ இடத்திற்கு விரைந்து செல்லும் அந்நேரத்திலேயே தீத்தடுப்பிற்குரிய சாதனங்களையும் பொருத்திக் கொண்டு தீயணைப்போர் தங்களை தயார் செய்து கொள்வர். இவ்வாறு, தீ விபத்து பற்றிய தகவல் பெறப்பட்ட

உடனேயே தீயணைப்புக் குழு ஒன்று விபத்து நடந்த இடத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

பேரழிவு மேலாண்மை நேர்வுகளிலும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பங்கு முக்கியமானதொன்றாகும். புயல், வெள்ளம் மற்றும் நிலச்சரிவு போன்ற இயற்கை சீற்றங்களை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் இந்நிர்வாகம் முற்றிலும் தயாராக உள்ளது. இத்துறையின் நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட நீச்சல் வீரர்கள், மிதவை படகுகள், உயிர்காக்கும் ரப்பர் மிதவைகள் மற்றும் மேலங்கிகள் முதலியவற்றைக் கொண்டு செயல்படுகின்றனர். மக்களை மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்வதற்கு தீயணைப்புப் பணியாளர்களுக்கு நன்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## VI. மனித வளம்

இத்துறையில், மொத்தம் **6,801** களப் பணியாளர்களும், **341** அமைச்சுப் பணியாளர்களும் உள்ளனர். களப் பணியாளர்களில் **2** மகளிர் கோட்ட அலுவலர்களும், **8** மகளிர் நிலைய அலுவலர்களும் உள்ளனர். இத்துறையில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட களப் பணியாளர்களின் எண்ணிக்கை தர வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

| வ.எண் | பதவியின் பெயர் | பதவியின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இயக்குநர் | 1 |
| 2. | இணை இயக்குநர் | 1 |
| 3. | துணை இயக்குநர் | 6 |
| 4. | கோட்ட அலுவலர் | 34 |
| 5. | உதவி கோட்ட அலுவலர் | 45 |
| 6. | நிலைய அலுவலர் | 340 |
| 7. | நிலைய அலுவலர் (போக்குவரத்து) | 5 |
| 8. | உதவி நிலைய அலுவலர் | 16 |
| 9. | முன்னணி தீயணைப்போர் | 787 |
| 10. | இயந்திர கம்மியர் ஓட்டுநர் | 273 |
| 11. | தீயணைப்போர் ஓட்டுநர் | 1104 |
| 12. | தீயணைப்போர் | 4189 |
| | மொத்தம் | 6801 |

காலியாக உள்ள 791 தீயணைப்போர் பணியிடங்களை நிரப்ப 21.03.2012 அன்று தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையத்தால் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த பணியாளர்கள் சேர்க்கை இவ்வாண்டிற்குள் முடிக்கப்படும்.

## VII. ஊர்திகள் மற்றும் சாதனங்கள்

நன்றாக பராமரிக்கப்படும் நவீன ஊர்திகள் மற்றும் சாதனங்கள் இத்துறை திறமையாக செயலாற்றுவதற்கு இன்றியமையாதவை ஆகும். இதனைக் கருத்தில் கொண்டு, இத்துறைக்கு 351 நீர்தாங்கி வண்டிகள், 82 நோயாளர் ஊர்திகள், 14 சிறிய நுரை தகர்வு ஊர்திகள், 20 அவசர கால மீட்பு ஊர்திகள், திரவ ஆற்றலால் இயங்கும் மேடை கொண்ட (இங்கிலாந்து – சைமன் ஸ்நார்கல்) ஊர்தி ஒன்று, சுழல் மேஜை ஏணி ஒன்று (இசுசூ மோரிடா ஜப்பான் தயாரிப்பு), திரவ ஆற்றலால் இயங்கும் மேடை கொண்ட சுழல் மேஜை ஏணி முறையே 37 மற்றும் 42 மீட்டர் உயரம் கொண்ட ஊர்திகள் 2, வான் நோக்கி உயரும் 54 மீட்டர் நீளம் கொண்ட ஏணி ஊர்திகள் 2, நீர் விடுகுழாய் பதிக்கும் ஊர்தி ஒன்று, தண்ணீர் லாரிகள் 55, மீட்பு இழுவை ஊர்தி ஒன்று, நடமாடும் பழுது பார்க்கும் ஊர்திகள் 2, அதிக அளவு நீர் வெளியேற்றும் திறனுள்ள எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய பம்புகள் 228 மற்றும் 93 மிதவைப் பம்புகளும் தேவையான தொழில்நுட்பப் பணியாளர்களுடன் வழங்கப்பட்டுள்ளன. இவை தவிர, சீருந்துகள், ஜீப்புகள், பேருந்துகள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் போன்ற சார்பு ஊர்திகளும் இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன.

தூக்கும் பைகள், புகை வெளியேற்றும் கருவிகள், நச்சு வாயுக்களை கண்டறியும் கருவிகள், மின்னாக்கிகள் மற்றும் மீட்புப் பணிக்கான அனைத்து உபகரணங்களையும் கொண்ட பெட்டி போன்ற நவீன உபகரணங்கள் இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன. கன மழை மற்றும் வெள்ள அபாய காலங்களில் இயற்கை இடர்பாடுகளை எதிர்கொள்ள ஏதுவாக 8 கண்ணாடி இழை விசைப் படகுகள், உயிர் காக்கும் மிதவைகள் மற்றும் மேலங்கிகள் கொண்ட 69 மிதவைப் படகுகள், இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன.

அனல் வழி உருவம் அறியும் நிழற்படக் கருவி ஒன்று, உயிர் கண்டுபிடிப்பான் 3, இடிபாடுகளில் சிக்கிக் கொண்டவர்கள் உள்ள இடத்தினை அடையாளம் காட்டும் கருவிகள் 3, பல்வகை நச்சு வாயுக்களை கண்டுபிடிக்கும் கருவிகள் 2, தீ பாதிக்காத உடைகள் 81, ரசாயன பாதுகாப்பு உடைகள் 111, தீ பாதிக்காத கையுறைகள் 222, தற்காப்பு உடைகள் 175, நீட்டிச் சுருங்கும் ஆற்றல் கொண்ட அவசர கால விளக்குகள் 49, மின்னாக்கியுடன் கூடிய மின் ரம்பங்கள் 75, பெட்ரோலில் இயங்கும் 5 குதிரை சக்தித் திறன் கொண்ட எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய மின் ரம்பங்கள் 41, சிமெண்ட் கலவை கட்டமைப்புகளை உடைக்கும் கருவிகள் 18, புகை வெளியேற்றும் கருவிகள் 17, முன்னும் பின்னும் இயங்கக் கூடிய ரம்பங்கள் 17, எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய வட்ட

ரம்பங்கள் 17, எளிதில் தூக்கிச் செல்லக் கூடிய துளையிடும் மின் கருவிகள் 17 மற்றும் சுருங்கும் வடிவமைப்பு ஏணிகள் 51 இத்துறையில் உள்ளன.

இத்துறையை நவீனமயமாக்குவதின் அவசியத்தைக் கருத்திற்கொண்டு, தண்ணீரைப் பீய்ச்சி அடிக்கும் தொழில்நுட்ப அடிப்படையில் இயங்கக் கூடிய 9 நவீன ரக நீர்தாங்கி வண்டிகள் மற்றும் 8 சிறிய ரக நீர்தாங்கி வண்டிகள் மற்றும் நீராற்றலால் இயங்கக் கூடிய 22 கோம்பி கருவிகள் வாங்குவதற்கு 2011–2012–ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.3.20 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## <u>VIII. தகவல் தொடர்பு வசதிகள்</u>

### (i) தொலை பேசிகள் மற்றும் கம்பி இல்லாத் தொலை தொடர்பு கருவிகள்

தீ விபத்து பற்றிய தகவல் கிடைத்தவுடன் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை துரிதமாக, உரிய நேரத்தில் மேற்கொள்ளுதல் இன்றியமையாததாகும். இதற்கு பணியாளர்களையும், இயந்திரங்களையும் குறைவான நேரத்தில் ஆயத்தப்படுத்துவது கட்டாயத் தேவை ஆகும். அனைத்து மாவட்ட தலைமையிடங்களிலும் மற்றும் பெரிய நகரங்களிலும் ‘101’ கட்டணமில்லா தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனுடன் சேர்த்து, சென்னை

மாநகரில் ‘102’ கட்டணமில்லா தொலைபேசி இணைப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்கூறிய கட்டணமில்லா தொலைபேசியின் மூலம் தகவல் பெறப்பட்டவுடன், கட்டுப்பாட்டு அறை மூலமாக சம்பந்தப்பட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, சம்பவ இடத்திற்கு விரைந்து செல்ல தீயணைப்புப் படையினர் முடுக்கிவிடப்படுகிறார்கள். உரிய நேரத்தில் விரைந்து செயல்பட ஏதுவாக ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கும் ஒரு தொலைபேசி இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், நிலைய அலுவலர் மற்றும் அதற்கு மேல் உள்ள அலுவலர் அனைவருக்கும் கைப்பேசி வசதி செய்து தரப்பட்டுள்ளது. தீயணைப்புப் பணிகளை துரிதப்படுத்தும் வகையில், சென்னை மாநகரம், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்கு கம்பியில்லா தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

தீ விபத்து அழைப்பு பெறப்பட்ட நொடியிலிருந்து, தீ விபத்து நிகழ்ந்த இடத்தை அடைய, எடுத்துக்கொள்ளும் நேரத்தை குறைக்க இத்துறையினால் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொதுவாக, சென்னை மாநகரில் சம்பவ இடத்தை அடைய, 6 நிமிடங்களோ அல்லது அதற்கும் குறைவான நேரமேயாகும். பிற

மாவட்டங்களிலும் இதனை குறைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்துறைக்கென ஒரு இணைய தளம் “http://www.tnfrs.tn.nic.in” என்ற முகவரியுடன் தேசிய தகவல் தொடர்பு மையத்தினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த இணைய தளம் பொது மக்களுக்கு தீப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறது.

## IX. பயிற்சி வசதிகள்

இத்துறையைச் சார்ந்த பணியாளர்கள் செம்மையாக செயல்பட்டு மனநிறைவு அளிக்கும் வகையில் பொதுமக்களுக்கு சேவை ஆற்றிட தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தனது பணியாளர்களுக்கு அனைத்து நிலைகளிலும் பயிற்சி அளிப்பதில் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இத்துறையில் புதியதாக வேலைக்கு சேருபவர்களுக்கு மிக உயரிய தரத்திலான விரிவான பயிற்சி அளிக்கப்படுகிறது. தீயணைப்பு மற்றும் மீட்பு முறைகளில் நவீன தொழில் நுட்ப உத்திகளைக் கையாண்டு தங்களின் பணியில் செயல்படுத்துவதற்கேற்ப, இத்துறையின் பணியாளர்களுக்கு அனைத்து பதவி நிலைகளிலும் நவீன பயிற்றுவிப்பு சாதனங்களை கொண்டு நல்ல தரமான பயிற்சி,

தாம்பரத்தில் இயங்கி வரும் மாநில பயிற்சி மையத்தில் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி மையம், நாக்பூர் தேசிய தீயணைப்பு கல்லூரியினால் வழங்கப்பெறும் பயிற்சியினை வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட மண்டல பயிற்சி மையங்களில் ஒன்றாக, இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தினால் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இப்பயிற்சி மையமானது, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதோடு மட்டுமல்லாமல், பிற மாநில மற்றும் அரசு சார்புடைய பொது நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் பெருமளவில் பொதுமக்களுக்கும் தீயணைப்புப் பயிற்சிகளைஅளித்து வருகிறது. கோட்ட தலைமை இடங்களில் தனிப்பட்ட நபர்களுக்கு அடிப்படை தீயணைப்பு பயிற்சி ஒரு வார காலத்திற்கு, நபர் ஒருவருக்கு ரூ1,000/– என்ற கட்டண வீதத்தில் அளிக்கப்படுகிறது. **2011–**ஆம் ஆண்டில் **1,422** தனியர்களுக்கு தீயணைப்பு பற்றிய செயல்முறைகளில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்திய அரசு ‘‘நாட்டில் உள்ள தீயணைப்பு மற்றும் அவசர பணிகளை வலுப்படுத்துதல்’’ என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த தீயணைப்புப் பணியாளர்களுக்கு ‘‘நகர்புறத்தில் ஏற்படும் விபத்துகளில் சிக்கியுள்ளவர்களை தேடுதல் மற்றும் மீட்புப் பணி தொடர்பான

பயிற்சிகள்'', ''முதலுதவி மருத்துவ சிகிச்சைத் தொடர்பான பயிற்சிகள்'' ஆகிய பயிற்சிகளை அளிக்க தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மாநில பயிற்சி மையத்தினை ஒரு பயிற்சி மையமாக அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் மாநில பயிற்சி மையத்தில் 28.11.2011 முதல் 19.02.2012 முடிய 3 பிரிவுகளாக 83 நபர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

<u>X. கட்டடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு</u>

தமிழகத்தில் 301 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களும் இதைத் தவிர தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஒகேனக்கல் மற்றும் நீலகிரி மாவட்டத்திலுள்ள கோத்தகிரியில், 2 மீட்புப் பணி நிலையங்களும் உள்ளன. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில், 175 நிலையங்கள் சொந்தக் கட்டடத்திலும், 29 நிலையங்கள் பிற அரசு துறை நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டடங்களிலும் மற்றும் 97 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

ஒரு அணிவகுப்பு மைதானமும், தீயணைப்பு ஊர்திகளின் நிறுத்துமிடமும் ஒருங்கிணைந்து ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் அமைப்பதற்கு, தோராயமாக 45 சென்ட் நிலம் தேவைப்படுகிறது. 13 மாவட்டங்களில்

25 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. 2300 சதுரஅடி பரப்பளவுள்ள ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் கட்டுவதற்கு தோராயமான மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 50 லட்சம் என கணக்கிடப்படுகிறது.

இத்துறைக்காக அனைத்து உள் கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய தலைமையக அலுவலகக் கட்டடம் சென்னை எழும்பூரில் கட்டுவதற்கு, எனது அரசு, ரூபாய் 5.99 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது.

இத்துறைக்கும் காவல் துறைக்குமிடையே கட்டுமானப் பணிகளில் ஒருங்கிணைப்பான செயல்பாடு ஏற்படும் வகையில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் மற்றும் அலுவலகங்களுக்கான கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு காவல் வீட்டுவசதி வாரியம் மூலம் மேற்கொள்ள உள் துறையின் 30.08.2011 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.479–ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

## XI. தீத் தடுப்பு முன் முயற்சிகள்

### i) தீத் தடுப்பு

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் முதன்மையான பணி தீத் தடுப்பு ஆகும். தீத் தடுப்புப்

பணிகளை தொழில்முறையாக கையாள இத்துறை 13 கோட்டங்களில் தீத் தடுப்புக் குழுக்களை அமைத்துள்ளது. தீ விபத்தினால் ஏற்படக் கூடிய இடர்பாடுகளை குறைப்பதற்கு ஏதுவாக ஊரக மற்றும் நகர்புறப் பகுதி மக்களிடம் தீத் தடுப்பு முறைகளை கற்பித்து விழிப்புணர்வை இக்குழுக்கள் ஏற்படுத்தி வருகின்றன. தீ பாதுகாப்பு மற்றும் தீத் தடுப்பு அவசியத்தை மக்கள் உணரும் வகையில், பள்ளிகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள் மற்றும் குடிசைப் பகுதிகள் ஆகியவற்றிலும் தீத் தடுப்பு மற்றும் தீ பாதுகாப்பு முறைகள் குறித்து பிரச்சாரங்கள் மற்றும் செயல்முறை விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. 2011–ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதும் 15,901 இடங்களில் பொதுமக்களுக்கு தீத் தடுப்பு முறைகள் குறித்த செயல் விளக்கங்கள் நடத்தப்பட்டன.

16.7.2004 அன்று கும்பகோணத்தில் பள்ளி ஒன்றில் ஏற்பட்ட கொடிய தீ விபத்தினை தொடர்ந்து, பள்ளிகள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையிடம் தடையில்லாச் சான்றிதழ் பெறுவது அவசியம் ஆக்கப்பட்டுள்ளது. போதுமான தீத் தடுப்பு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளனவா என்பதை சம்பந்தப்பட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தின் நிலைய அலுவலர் உறுதி செய்து கொண்ட பின்னரே தடையில்லாச் சான்று வழங்க வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. 2011–ஆம் ஆண்டில் தடையில்லாச்

சான்று வழங்கும் பொருட்டு, **9,768** பள்ளிகள், நிலைய அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும், **7,408** கல்வி நிறுவனங்களில் தீ மற்றும் பேரழிவுகளிலிருந்து பாதுகாப்பது குறித்து ஒத்திகைப் பயிற்சி மற்றும் செயல்முறை விளக்கங்கள் நடத்தப்பட்டுள்ளன.

பள்ளி மாணவர்கள் மற்றும் பள்ளி பணியாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அவசர காலங்களில் பாதுகாப்பாக தப்பிக்கும் மற்றும் மீட்கும் முறைகள் குறித்து கற்பிக்கும் பொருட்டும், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டு, தீ விபத்திலிருந்து பாதுகாப்பாக வெளியேறும் மற்றும் மீட்பு முறை குறித்த ஒத்திகைகள் தேசிய அளவில் **21.01.2012** அன்று நடத்தப்பட்டன.

மாநிலம் முழுவதிலும் உள்ள பள்ளி மாணவர்கள் மற்றும் பள்ளி பணியாளர்களுக்கு தீப் பாதுகாப்பு முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, **14.11.2011** அன்று "தீ விபத்து பற்றிய முன்னெச்சரிக்கை மற்றும் தவிர்த்தல்" என்ற தலைப்பில் ஓவியப் போட்டி தேசிய அளவில் அனைத்து பள்ளிகளிலும் நடத்தப்பட்டது.

மருத்துவமனைகளில் தீ பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு, சென்னை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மாநகர காவல் ஆணையாளரால் கண்டறியப்பட்ட **118** மருத்துவமனைகளில் பாதுகாப்பு தணிக்கை நடத்த

சம்மந்தப்பட்ட துணை காவல் ஆணையாளர் தலைமையின் கீழ் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் கோட்ட அலுவலர், வருவாய்த் துறை, சென்னை மாநகராட்சி, மின் வாரியம் மற்றும் மருத்துவ கல்வித் துறைகளைச் சேர்ந்த அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதே போன்று, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரால் ஆய்வு செய்ய கண்டறியப்பட்ட 37 மருத்துவமனைகளில் பாதுகாப்புத் தணிக்கை மேற்கொள்ள மாவட்டங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை கோட்ட அலுவலரின் தலைமையின் கீழ் வருவாய்த் துறை, நகராட்சி ஆணையரகம், நகர மற்றும் ஊரக திட்ட இயக்குநரகம், மின் வாரியம், காவல்துறை மற்றும் சுகாதாரத் துறைகளைச் சேர்ந்த அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு ஆய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**ii) தீ பாதுகாப்பு தன்னார்வத் தொண்டர்கள்**

மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களிலும் பொதுமக்களை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயல்பாட்டிற்கு உறுதுணையாக ஈடுபடுத்தும் நோக்கத்துடன் தீ பாதுகாப்பு தன்னார்வத் தொண்டர்கள் சேர்க்கப்படுகின்றனர். இதுவரை

மொத்தம் **19,810** நபர்கள், தீ பாதுகாப்பு தன்னார்வத் தொண்டர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

**iii) திரையரங்கு / கட்டடங்களில் தீத் தடுப்பு**

திரையரங்குகள் தீ விபத்து ஏற்பட அதிக சாத்தியக்கூறுகள் உள்ள இடங்களாகும். எனவே, திரையரங்குகளுக்கு உரிமம் வழங்குவதற்கு முன்பு கீழ்காணும் முக்கிய தீத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளனவா என ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது:-

1. திரையரங்குகளின் உள்ளே போதுமான தீயணைப்பான்களும் மற்றும் படச்சுருள் இயக்குபவர் அறையில் முதல் உதவிப் பெட்டியும் கட்டாயமாக இருத்தல் வேண்டும்;
2. பல திரையரங்குகள் ஒருங்கிணைந்த அடுக்குமாடி கட்டடத்தில் நீர் தெளிப்பான்கள் மற்றும் புகை அறியும் கருவி அமைத்தலைக் கட்டாயப்படுத்துதல்;
3. மணல் மற்றும் தண்ணீரால் நிரப்பப்பட்ட தீ வாளிகள் போதுமான அளவு வைத்தல்;
4. தீயணைப்புப் பணியினை தடையின்றி தொடர்ச்சியாக மேற்கொள்ள தண்ணீர் சேமிப்புத் தொட்டி அமைத்தல்;

5. பொய் மேற்கூரைகள் மற்றும் சுவர்களில் பொருத்தப்படும் அலங்கார வடிவமைப்புகள் தீ பாதிக்காத பொருட்களால் அமைக்கப் பட்டிருக்க வேண்டும்;
6. அவசரகால வெளியேறும் வழிகள் போதுமான அளவு அமைத்தல்;
7. திரையரங்குகளில் பொருத்தப்பட்டுள்ள அனைத்து தீயணைப்புக் கருவிகளை கையாள்வதிலும் மற்றும் பராமரிப்பதிலும் பணியாளர்கள் மற்றும் வேலையாட்களுக்கு பயிற்சி அளித்தல்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் திரையரங்குகளை ஆண்டு தோறும் ஆய்வு செய்வதற்காக இத்துறையின் மாவட்ட அலுவலரின் தலைமையின் கீழ் பல்வேறு துறையினரை உள்ளடக்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 2011–ஆம் ஆண்டில் 2,414 திரையரங்குகள் மற்றும் பொதுமக்கள் கூடுமிடங்கள் இக்குழுவால் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. திரையரங்குகள் தவிர, மேலும் 34,805 கட்டடங்கள் தீயணைப்புப் பணிகளை எதிர்கொள்ள தயார் நிலையில் உள்ளனவா என்று ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**iv) குடிசைப் பகுதிகளில் கோடைக் காலத்தில் ஏற்படும் தீ விபத்துகள்**

கோடைக் காலத்தில் குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துகளை உடனடியாக எதிர்கொள்ளும் நோக்கத்தில் தீ விபத்து ஏற்பட அதிக வாய்ப்புள்ள பகுதிகளில், ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் முடிய இத்துறையைச் சார்ந்த தீயணைப்பு ஊர்திகள் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றன.

**v) தீயணைப்பு தொண்டு நாள்**

இத்துறை ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் திங்கள் 14–ஆம் நாள் முதல் ஒரு வார காலத்தை தீயணைப்பு தொண்டு நாளாக கடைபிடித்து வருகிறது. இந்த நாட்களில் மாநிலத்திலுள்ள அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களிலும் தீப் பாதுகாப்பு பிரச்சாரங்கள், செயல்முறை விளக்கங்கள், சொற்பொழிவுகள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. செய்தித் தாள்கள், தொலைக் காட்சி மற்றும் வானொலி வாயிலாகத் தீத் தடுப்பு தொடர்பான பிரச்சாரங்கள் இத்துறையால் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்றன.

## <u>XII. நலத் திட்டங்கள்</u>

### i) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் சேமநல நிதி

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு நிதி உதவி செய்வதற்கென **1962–**ஆம் ஆண்டில், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் சேமநல நிதி என்ற தன்னார்வ நிதி ஏற்படுத்தப்பட்டது. இந்நிதி கீழ்க்கண்ட தேவைகளுக்காக ஏற்படுத்தப்பட்டது:–

(அ) காசநோய், தொழுநோய் மற்றும் புற்றுநோய் போன்ற கொடிய நோய்களினால் அவதியுறும் தீயணைப்புப் பணியாளர்களுக்கும் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போருக்கும் ஊட்டச்சத்துள்ள உணவு வாங்கிக் கொள்ள;

(ஆ) உறுப்பினர்களின் குழந்தைகளின் உயர் கல்விச் செலவுக்காக;

(இ) மரணமடைந்த உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக;

(ஈ) உறுப்பினர்களோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களோ இறந்துவிட்டால், அவர்களது ஈமச் சடங்கு செலவுக்காக;

இந்த நலநிதிக்கு மானியமாக ரூ.12 லட்சம் ஒவ்வொரு ஆண்டும் அரசு வழங்கி வருகிறது. இத்திட்டத்தில் தற்போது 5,573 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். 2011–2012–ஆம் நிதியாண்டில் சந்தா தொகையாக ரூ.23.71 லட்சம், உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு கீழ்க்கண்ட தேவைகளுக்காக நிவாரணத் தொகையாக ரூ.33.29 லட்சம் வழங்கப்பட்டுள்ளது:–

| | |
|---|---|
| உறுப்பினர்களுடைய குழந்தைகளின் உயர் கல்விச் செலவுக்காக | ரூ. 8.40 லட்சம் |
| பணியாளர்களின் குழந்தைகளில் 10வது மற்றும் 12வது வகுப்புகளில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கியது மற்றும் 85 சதவீதமும் அதற்கு மேலும் மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு ஆறுதல் பரிசு வழங்கியது. | ரூ. 3.12 லட்சம் |
| உறுப்பினர்கள் ஓய்வு பெறும் போது அளிக்கப்பட்ட நிதியுதவி | ரூ. 9.53 லட்சம் |

| | |
|---|---|
| மரணமடைந்த உறுப்பினர்களின் குடும்பங்களுக்கும், உறுப்பினர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுடைய ஈமச் சடங்கு செலவுக்காகவும் வழங்கப்பட்ட நிவாரணம் | ரூ.12.24 லட்சம் |
| **மொத்தம்** | **ரூ.33.29 லட்சம்** |

**ii) குடும்ப நல நிதித் திட்டம்**

பணியிலிருக்கும் போது மரணமடையும் பணியாளர் குடும்பத்தினருக்கு குடும்ப நல நிதியிலிருந்து நிவாரணத் தொகையாக ரூ.1,50,000/– அரசால் வழங்கப்படுகிறது.

**iii) கருணைத்தொகை**

பணியாற்றும் நேரங்களில் விபத்தில் மரணமடையும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கருணைத் தொகையினை 2001–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பின்வருமாறு உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டது:–

| | | |
|---|---|---|
| (i) | பணியாற்றும் போது மரணமடையும் பணியாளர்களின் குடும்பத்திற்கு | ரூ 5,00,000/– |
| (ii) | பணியாற்றும் போது நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளவர்களுக்கு | ரூ 1,00,000/– |
| (iii) | பணியாற்றும் போது கடுமையாக காயமடைந்தவர்களுக்கு | ரூ 20,000/– |
| (iv) | பணியாற்றும் போது சிறு காயம் அடைந்தவர்களுக்கு | ரூ 10,000/– |

**iv) குழுக் காப்பீட்டுத் திட்டம்**

பணியிலிருக்கும் போது மரணமடையும் துறையின் பணியாளர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக, இயக்குநர் முதல் தீயணைப்போர் வரையிலான (அமைச்சுப் பணியாளர்கள் நீங்கலாக) அனைவருக்கும், குழுக் காப்பீட்டுத் திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இறந்த பணியாளரின் குடும்பத்திற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.1,00,000/– நிவாரணம் அளிக்கப்படுகிறது.

**v) உணவுப் பொருட்களுக்கு மானியம் வழங்கும் திட்டம்**

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் உள்ள தீயணைப்போர் முதல் உதவிக் கோட்ட அலுவலர் பதவி வரையிலான களப் பணியாளர்களுக்கு, விலையில்லா அரிசியும், கோதுமை, ரவை / மைதா, துவரம்

பருப்பு, உளுத்தம் பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் 50 சதவீத மானிய விலையிலும் வழங்கப்படுகின்றன. இதற்கென ஆண்டொன்றுக்கு ரூ.56.28 லட்சம் செலவிடப் படுகிறது.

**vi) குடியிருப்புகள் கட்டுதல்**

தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளின் போது இத்துறையின் களப் பணியாளர்கள் அவசரமாக விரைந்து செயல்படவும், அவசரக் காலங்களில் உடனடியாக பணியாளர்களைத் திரட்டவும், செயல்திறனை கூட்டவும், பணியாளர்களுக்கு அவர்களது பணியிடத்திற்கு அருகிலேயே குடியிருப்பு வசதி ஏற்படுத்தி தருவது மிகவும் அவசியமானதாகும். இத்துறையைச் சேர்ந்த அமைச்சுப் பணியாளர்கள் தவிர, அலுவலர்கள் மற்றும் களப் பணியாளர்கள் அனைவரும் பணி விதிகளின்படி வாடகையில்லா குடியிருப்புகள் பெற தகுதி உடையவராவர். இவர்களுக்கென தமிழகம் முழுவதும் 1,027 குடியிருப்புகள் உள்ளன. தற்போது, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தினரால் 16 இடங்களில் 269 குடியிருப்புகள் கட்டுமானம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ளது. அனைத்து பணியாளர்களுக்கும் குடியிருப்புகள் படிப்படியாக கட்டித் தரும் வகையில் கட்டுமானப் பணிகள் துரிதப்படுத்தப்படும்.

**vii) பணியாளர்களுக்கான உணவுப் படி**

நிலைய அலுவலர் பதவிக்கு குறைவாக உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி பணியாளர்களுக்கான உணவுப் படி சென்னை மாநகரத்தில் ரூ.80–லிருந்து ரூ.100 ஆகவும், பிற இடங்களில் ரூ.55–லிருந்து ரூ.75 ஆகவும் இந்த அரசால் உயர்த்தி வழங்கப்படுகிறது. இதனால் ஆண்டொன்றுக்கு அரசுக்கு ரூ.60,50,880 கூடுதல் செலவாகும்.

## XIII. ஊக்குவித்தலும், ஊக்கத் தொகைகளும்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் வீர தீர செயல்களை அங்கீகரிக்கவும், அவர்கள் திறம்பட பணிபுரிய ஊக்குவிக்கும் வகையிலும் பின்வரும் பதக்கங்கள் மற்றும் விருதுகள் அரசால் வழங்கப்படுகின்றன:–

### i. தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (அண்ணா பதக்கம்)

ஒவ்வொரு ஆண்டும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15–ம் நாளன்று தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (அண்ணா பதக்கம்) வழங்கப்படுகிறது. இப்பதக்கம் பெறுபவர்கள், அவர்களுடைய பதவித் தரத்திற்கேற்ப ஒட்டுமொத்த பரிசுத்

தொகையாக ரூ.4,000/– முதல் ரூ.6,000/– வரை பெறத் தகுதியுடையவராவார்கள். 2011–ஆம் ஆண்டில் 10 பாராட்டத்தக்க பணிகளுக்கான பதக்கங்களும் மற்றும் 16 வீர தீர செயல்களுக்கான பதக்கங்களும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**ii. தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணிப் பதக்கம் (பொங்கல் தினத்தன்று வழங்கப்படுகிறது)**

இப்பதக்கம் பெறும் நிலைய அலுவலர் பதவிக்கு கீழான முன்னணித் தீயணைப்போர்/இயந்திரக் கம்மியர் ஓட்டுநர், தீயணைப்போர் ஓட்டுநர் மற்றும் தீயணைப்போர் அனைவருக்கும் ரூ.100/– ரொக்கப் படியாக மாதந்தோறும் வழங்கப்படுகிறது. 2012–ஆம் ஆண்டில் 120 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பணியாளர்களுக்கு இப்பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

**iii. சிறந்த பணிக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணிப் பதக்கம்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் திறனறிந்து அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், அவர்களுக்கு உற்சாகமளித்து உயர்நோக்கினை அடையும் வகையில் உத்வேகம் அளிக்கவும் இந்த பதக்கமானது என்னுடைய அரசால் 2001–ம் ஆண்டு ஜுலைத்

திங்களில் ஏற்படுத்தப்பட்டது. ஆண்டுதோறும் தீத்தொண்டு நாளான ஏப்ரல் **14–ஆம்** நாளன்று நிலைய அலுவலர், முன்னணித் தீயணைப்போர், தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவி வகிப்போர் ஆகியோருக்கு ஒரு பதக்கம் வீதம் மூன்று பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. இப்பதக்கம் **8** கிராம் எடையில் **22** கேரட் தங்கத்தில் செய்யப்பட்டதாகும். மேலும், நிலைய அலுவலர் மற்றும் அதற்கு இணையான பதவி வகிப்போருக்கு ரூ.**3,000/–**, முன்னணி தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவி வகிப்போருக்கு ரூ.**2,500/–** மற்றும் தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவி வகிப்போருக்கு ரூ.**2,000/–** ஒட்டுமொத்த மானியமாக வழங்கப்படுகிறது.

**iv.** மேற்குறிப்பிட்ட பதக்கங்களைத் தவிர, ஒவ்வொரு ஆண்டும் வீர தீரச் செயல் புரிந்த பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு இவ்வரசால் வழங்கப்பட்டு வரும் அண்ணா வீர தீர பதக்கம் இந்த ஆண்டு ஜனவரி **26–ஆம்** தேதி நடைபெற்ற குடியரசு தினவிழாவில், **16.01.2012** அன்று சென்னை எழிலகம் வளாகத்தில் உள்ள கலஸ் மஹால் கட்டடத்தில் ஏற்பட்ட பெருந் தீ விபத்தில் பணியாற்றும் போது கடுமையாக காயமடைந்த திருமதி என்.ப்ரியா, கோட்ட தீயணைப்பு அலுவலர், திரு.ர.முருகன், நிலைய தீயணைப்பு அலுவலர், மற்றும் இத்தீ விபத்தில் பணியாற்றும் போது

மரணமடைந்த திரு.கே.அன்பழகன், முன்னணி தீயணைப்போர் ஆகியோர்களுக்கு தலா ரூ.5000/– மதிப்புள்ள தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் பரிசுத் தொகை ரூ.1,00,000/– வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இவர்கள் தங்களுடைய மேற்கண்ட வீர தீர செயல்களின் மூலம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணியாளர்களுக்கு ஒரு முன்னுதாரணத்தை உருவாக்கியுள்ளார்கள்.

மேலும், (i) சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் மெச்சத்தக்க / பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பணிப் பதக்கம்; (ii) குடியரசு தினத்தன்று வழங்கப்படும் மெச்சத்தக்க / பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பணிப் பதக்கம் மற்றும் (iii) குடியரசுத் தலைவரின் வீர தீரச் செயல்களுக்கான தீயணைப்புப் பணிப் பதக்கம் / வீரதீர செயல்களுக்கான தீயணைப்புப் பதக்கம் ஆகியன மாநில அரசின் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசால் வழங்கப்படுகின்றன. 2011–2012–ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பதினொரு பணியாளர்கள் இவ்விருதுகளைப் பெற்றுள்ளனர்.

## <u>XIV. 2011–2012ல் மேற்கொள்ளப்பட்ட முன் முயற்சிகள்</u>

இத்துறையின் மூலம் பொதுமக்களுக்கு அளிக்கும் சேவையின் தரத்தை உயர்த்துவதற்கும் மற்றும்

பணியாளர்களின் நலனை மேம்படுத்துவதன் மூலம் சிறந்த சேவையாற்றிடவும் பின்வருவனவற்றை செயல்படுத்த இந்த அரசு ஆணையிட்டுள்ளது:–

- விழுப்புரம் கோட்டம், சின்னசேலம் என்ற இடத்தில் ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ரூ.79.79 லட்சம் செலவில் துவங்கப்பட்டுள்ளது.

- மதுரை கோட்டம், டி.கல்லுப்பட்டி என்ற இடத்தில் ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ரூ.75.01 லட்சம் செலவினத்தில் துவங்கப்பட்டுள்ளது.

- திருநெல்வேலி கோட்டம், ஆலங்குளம் என்ற இடத்தில் ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ரூ.78.11 லட்சம் செலவினத்தில் அமைக்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- ராமநாதபுரம் சிவகங்கை கோட்டத்தை இரண்டாகப் பிரித்து சிவகங்கையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய கோட்டம் ரூ.42 லட்சம் செலவினத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

- மாநகரங்களின் உபயோகத்திற்கு ரூ.3.20 கோடி செலவில் 9 தரம் உயர்த்தப்பட்ட நவீன ரக நீர்தாங்கி வண்டிகள் மற்றும் தண்ணீரைப் பீய்ச்சி அடிக்கும்

தொழில் நுட்பத்தின் அடிப்படையிலான 8 விரைந்து செல்லும் திறன் கொண்ட சிறிய நீர்தாங்கி வண்டிகள் மற்றும் நீராற்றலால் இயங்கும் 22 இணை ஒருங்கிணைந்த கருவிகள் வாங்குவதற்கு ஒப்பளிப்பு செய்து அரசாணை (நிலை) எண்.536, நாள்:22.09.2011–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

- அம்பத்தூர் மற்றும் திருச்சி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் உபயோகத்திற்கு 2 சிறிய நுரை தகர்வு ஊர்திகள் ரூ.48 லட்சம் தொடரா செலவினத்தில் கட்டுமானம் செய்ய ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- 9 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 2 இரு சக்கர வாகனங்கள் ரூ.45.10 லட்சம் செலவினத்தில் வாங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- 28 கணினிகள் அதற்குரிய அச்சுப்பகர்ப்பான்கள் ரூ.12.60 லட்சம் செலவில் வாங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

- மோப்ப நாய்ப்படை பிரிவிலுள்ள மோப்ப நாய் ஒவ்வொன்றிற்கும் உணவுக் கட்டணம் நாளொன்றிற்கு ரூ.54/–லிருந்து ரூ.100/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

## XV. பகுதி–II திட்டங்கள்

2012–2013ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்திட ரூ.77.45 லட்சம் செலவினத்தை இந்த அரசு வழங்க உள்ளது:–

- ரூ.20 லட்சம் செலவில் பழைய ஊர்திகளுக்கு பதிலாக 2 ஜீப்புகள் மற்றும் 2 சீருந்துகள் வாங்குதல்.
- ரூ.48 லட்சம் செலவில் இரண்டு சிறிய நுரை தகர்வு ஊர்திகள் வாங்குதல்.
- ரூ.4.95 லட்சம் செலவில் 10 கணினிகள், அச்சுப்பகர்ப்பான்கள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்குதல்.
- ரூ.4.50 லட்சம் செலவில் இயக்குநரகம் மற்றும் 5 மண்டல அலுவலகங்களுக்கு 6 ஜெராக்ஸ் இயந்திரங்கள் வாங்குதல்.

## XVI. முடிவுரை

தீ விபத்து காலங்களில் மட்டுமே தீயணைப்புப் பணியாளர்கள் நினைவு கொள்ளப்படுகின்றனர். ஆபத்து காலம் முடிந்து விலை மதிப்பில்லாத உயிர்கள் மற்றும் உடைமைகள் காப்பாற்றப்பட்ட பின்னர் அவர்களது செயல் நினைவில் கொள்ளப்படுவதில்லை. இதுவே தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிலையாக இருந்தது. இந்நிலையை மாற்றும் விதமாக வீர தீர செயல்களுக்கான அண்ணா பதக்கம் (மாநிலத்தின் குடிமக்களுக்கு வழங்கப்படுவது) உயிரை துச்சமென மதித்து சமூக நலத்துறை இயக்குநர் அலுவலகத்தில் ஏற்பட்ட பெருந்தீ விபத்திலிருந்து, விலைமதிப்பில்லாத அரசு ஆவணங்களை காப்பாற்றும் பணியினை மேற்கொண்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைச் சேர்ந்த மூன்று பணியாளர்களுக்கு 2012–ல் வழங்கப்பட்டது. மூவரில் ஒருவர் துரதிருஷ்டவசமாக உயிரிழக்க நேரிடினும் மற்ற இரு பணியாளர்களுக்கு சிறந்த சிகிச்சை வழங்கும் பொருட்டு மருத்துவ செலவினை முழுமையாக அரசே ஏற்றுக் கொண்டது. இது அவர்களின் வீர தீர செயல்களை அங்கீகரிக்கும் அரசின் அடையாளச் செய்கையாகும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினரின் நலனைக் காப்பதில் எனது அரசு எப்பொழுதும்

தனி அக்கறை கொண்டுள்ளது. இது தொடரும். உலக அளவில் சிறந்த தீயணைப்புப் படைக்கு இணையாக நமது தீயணைப்புப் படை விளங்க வேண்டும் என்ற இலக்கை எய்தும் வகையில் அவர்களுக்கு சிறந்த பயிற்சி மற்றும் இடம் பெயர் ஆற்றல் வசதிகளை அளித்து, தேவைப்படும் சமயத்தில் அவர்கள் தொடர்ந்து உத்வேகத்துடனும், பொறுப்புடனும் தங்கள் திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்பதே இந்த அரசின் உயரிய நோக்கமாகும்.

**ஜெ ஜெயலலிதா**
**முதலமைச்சர்**

# அட்டவணை – I

## தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை
## நிருவாக அமைப்பு



# அட்டவணை – II

## மண்டலங்களின் கீழ் செயல்படும் நிலையங்கள் மற்றும் இதர அலகுகள்

**வடக்கு மண்டலம்**

| | தீமீபநி | தீதகு | மற்றவை |
|---|---|---|---|
| 1. வட சென்னை | 9 | 1 | 1* |
| 2. தென் சென்னை | 9 | 1 | 1* |
| 3. மத்திய சென்னை | 7 | – | – |
| 4. சென்னை புறநகர் | 8 | – | – |
| 5. வடக்கு மண்டலம் | – | – | 2** |
| மொத்தம் | 33 | 2 | 4** |

**வடமேற்கு மண்டலம்**

| | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1. வேலூர் | 16 | 1 |
| 2. திருவண்ணா மலை | 12 | – |
| 3. காஞ்சிபுரம் | 10 | 1 |
| 4. திருவள்ளூர் | 9 | – |
| மொத்தம் | 47 | 2 |

**மத்திய மண்டலம்**

| | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1.திருச்சிராப்பள்ளி | 8 | 1 |
| 2. புதுக்கோட்டை | 12 | 1 |
| 3. தஞ்சாவூர் | 9 | – |
| 4. நாகப்பட்டினம் | 11 | – |
| 5. கடலூர் | 15 | – |
| 6. விழுப்புரம் | 12 | – |
| 7. கரூர் | 4 | – |
| 8. பெரம்பலூர் | 6 | – |
| 9. திருவாரூர் | 11 | – |
| மொத்தம் | 88 | 2 |

**தெற்கு மண்டலம்**

| | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1. மதுரை | 10 | – |
| 2. திருநெல்வேலி | 13 | – |
| 3. கன்னியாகுமரி | 7 | – |
| 4. தூத்துக்குடி | 9 | – |
| 5. விருதுநகர் | 8 | 1 |
| 6. இராமநாதபுரம் | 11 | – |
| 7. சிவகங்கை | 6 | |
| 8. தேனி | 8 | – |
| மொத்தம் | 72 | 1 |

**மேற்கு மண்டலம்**

| | தீமீபநி | தீதகு |
|---|---|---|
| 1. கோயம்புத்தூர் | 10 | 1 |
| கோத்தகிரி | 1@ | |
| 2. ஈரோடு | 9 | 1 |
| 3.திருப்பூர் | 7 | 1 |
| 4. சேலம் | 11 | 1 |
| 5. தருமபுரி | 4 | 1 |
| ஒகேனக்கல் | 1@ | |
| 6. கிருஷ்ணகிரி | 7 | – |
| 7. திண்டுக்கல் | 9 | 1 |
| 8. நாமக்கல் | 4 | – |
| மொத்தம் | 61+2@ | 6 |

மொத்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் எண்ணிக்கை 301 + 2 @

<u>பிற நிறுவனங்கள்</u>

| | |
|---|---|
| மாநில பயிற்சி மையம் | 1 |
| மாநிலப் பட்டறை | 1 |
| மீட்புப் பணி நிலையம் | 2@ |
| மோப்பநாய் படை | 1 |
| இசை மேளக்குழு | 1 |

குறிப்பு– தீமீபநி : தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம்

தீதகு: தீத்தடுப்புக் குழு

மற்றவை:

*புகைப்படப் பிரிவு

**தீக்கட்டுப்பாட்டு அறை மற்றும் வான்தந்திப் பிரிவு

அடைப்புக் குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை அந்தந்தப் பதவிகளில் உள்ளோர் எண்ணிக்கையினைக் குறிப்பதாகும்.

# அட்டவணை – III

## மாவட்ட வாரியான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள்

| வ.எண் | மாவட்டம் | நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரியலூர் | 3 |
| 2 | சென்னை | 33 |
| 3 | கோயம்புத்தூர் | 7 |
| 4 | கடலூர் | 15 |
| 5 | திண்டுக்கல் | 9 |
| 6 | தருமபுரி (ஒரு மீட்புப் பணி நிலையம் உட்பட) | 5 |
| 7 | ஈரோடு | 9 |
| 8 | கரூர் | 3 |
| 9 | காஞ்சிபுரம் | 10 |
| 10 | கன்னியாகுமரி | 7 |
| 11 | கிருஷ்ணகிரி | 7 |
| 12 | மதுரை | 10 |
| 13 | நாகப்பட்டினம் | 11 |
| 14 | நாமக்கல் | 4 |
| 15 | நீலகிரி (ஒரு மீட்புப் பணி நிலையம் உட்பட) | 4 |
| 16 | புதுக்கோட்டை | 12 |
| 17 | பெரம்பலூர் | 2 |
| 18 | ராமநாதபுரம் | 11 |
| 19 | சேலம் | 11 |
| 20 | சிவகங்கை | 6 |
| 21 | தஞ்சாவூர் | 9 |
| 22 | தேனி | 8 |
| 23 | திருவண்ணாமலை | 12 |
| 24 | திருச்சிராப்பள்ளி | 10 |
| 25 | திருவாரூர் | 11 |
| 26 | திருவள்ளூர் | 9 |
| 27 | தூத்துக்குடி | 9 |
| 28 | திருப்பூர் | 7 |
| 29 | திருநெல்வேலி | 13 |
| 30 | வேலூர் | 16 |
| 31 | விழுப்புரம் | 12 |
| 32 | விருதுநகர் | 8 |
| | **மொத்தம்** | **303** |